<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை – செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக வெளியிடப்படும் தமிழரசு ஆங்கில இதழ் தற்போது மூன்று மாதங்களுக்கொருமுறை வெளியிடப்பட்டு வருவதை மாத வெளியீடாக வெளியிட ஆகும் ஆண்டு சந்தா ரூ.240/– வீதம் ஆயுள் சந்தா (பத்து வருடம்) ரூ.2,400/– நிர்ணயித்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசாணை (நிலை) எண். 245

நாள் 13.07.2012.
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆனி 29 ம் நாள்
படிக்கப்பட்டது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டம் 21.02.2012.

------

<u>ஆணை</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 21.02.2012 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில் **(தமிழரசு காலாண்டு ஆங்கில இதழ் மாத இதழாக மலரும்)** காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ் இனி மாத இதழாக வெளியிடப்படுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

2. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக வெளியிடப்படும் தமிழரசு ஆங்கில இதழ் தற்போது மூன்று மாதங்களுக்கொருமுறை வெளியிடப்பட்டு வருகிறது. இதனை மாத வெளியீடாக வெளியிட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.2.2012 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆணையின்படி, தமிழரசு ஆங்கில இதழை இவ்வாணை வெளியிடப்படும் திங்கள் முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழில் ஆற்றும் உரைகளின் ஆங்கில மொழியாக்கம், அரசின் சாதனைகள் ஆகியவைகளை உள்ளடக்கிய மாத இதழாக வெளியிட இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

3. தமிழரசு பத்திரிக்கையின் தமிழ் மாத வெளியீட்டிற்கான ஒரு இதழின் விலை ரூ.20/– போன்று தமிழரசு ஆங்கில இதழுக்கும் ஒரு இதழின் விலை ரூ.20/– என நிர்ணயிக்கலாம் எனவும் ஆண்டுக்கு 12 இதழ்கள் வெளிவருவதையொட்டி ஆண்டு சந்தா (12X20) ரூ.240/– எனவும் ஆயுள் சந்தா (10 வருடம்) ரூ.2,400/– எனவும் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.,

4. ஆங்கில இதழுக்கு 31.03.2012 வரை 3,269 சந்தாதாரர்கள் உள்ளனர். இதில் ஆண்டு சந்தா 886, ஆயுள் சந்தா 2,383 ஆகும். ஆங்கில இதழின் விலையை சீரமைத்து புதிதாக சந்தா தொகை நிர்ணயிக்கப்படும்போது சந்தாத் தொகையினை இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து புதிதாக சேரும் சந்தாதாரர்களிடம் நடைமுறைப்படுத்தவும் துணை இயக்குநர் (வெளியீடுகள்) அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணை செயலாளர், சென்னை–9.
துணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு, சென்னை–2.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
<u>நகல்</u>
நிதி(வ.செ.பொ.1/வ.செ.பொ.2)/ தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/–
பிரிவு அலுவலர்

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை – செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக வெளியிடப்படும் தமிழரசு ஆங்கில இதழ் காலாண்டு இதழாக இதுவரை இருந்ததை மாத இதழாக மாற்றியதால் ஏற்பட்ட பணிச்சுமை குறைப்பதற்கு தொகுப்பூதியத்தின் அடிப்படையில் ஒரு பிழைத்திருத்துபவர் மற்றும் ஒரு கணிணி இயக்குபவரை நியமனம் செய்ய ஆணை – வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசாணை ( நிலை ) எண். 246

நாள் 13.07.2012.
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆனி 29 ம் நாள்
படிக்கப்பட்டது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டம் 21.02.2012.

------

ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 21.02.2012 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில் காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ், இனி மாத இதழாக வெளியிடப்படுவதை முன்னிட்டு நான்கு புதிய பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் தோற்றுவிக்கப்படும். என்று ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

2. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக வெளியிடப்படும் தமிழரசு ஆங்கில இதழ் தற்போது மூன்று மாதங்களுக்கொருமுறை வெளியிடப்பட்டு வருகிறது. இதனை மாத வெளியீடாக வெளியிட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.2.2012 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆணையின்படி, மாத இதழாக மாற்றியதால் பணிச்சுமை அதிகமானதோடு ஆங்கிலத்திற்கு போதிய அலுவலர்கள் இல்லை. மேலும் ஆங்கிலப் புலமை பெற்ற பணியாளர்கள் இருந்தால்தான் மாத இதழை உரிய நேரத்தில் வழங்க இயலும், அது மட்டுமன்றி கணிணியில் தட்டச்சு செய்தல், தொகுத்தல், மொழிபெயர்த்தல், பிழை திருத்துதல், வடிவமைப்பு ஆகிய பணிகள் கூடுதலாக ஏற்படுகிறது. தமிழரசு ஆங்கில இதழை மாத இதழாக மாற்றுவதால் ஏற்படும் கூடுதல் பணிச்சுமையைக் கருத்தில் கொண்டும், சிறப்பு வெளியீடுகள் வெளியிடும் பணிகளையும் மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் பெரும்பாலான செய்தி வெளியீடுகள் தமிழிலேயே வெளிவருவதால் அவற்றை, ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்க ஏதுவாகவும், தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்ற (ஆங்கில மொழியில் முதுநிலைப்பட்டம் பெற்ற) ஒருவரை போதிய சிறப்பாசிரியர் (ஆங்கிலம்) பணியிடத்தில் ரூ.20,000/– தொகுப்பூதியத்தில் நியமிக்கும் வகையிலும் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பாளர் பணியிடத்தைஆங்கிலத்தில் புலமைப் பெற்ற, ஆங்கிலம் பயின்ற ஓய்வு பெற்ற ஆங்கில பேராசிரியர்கள்/ ஆசிரியர்களில் தகுதியான இரண்டு நபர்களை தலா ரூ.20,000/–மாதத் தொகுப்பூதியத்தில் நியமிக்கவும் பிழைத் திருத்தம் பணிகளை கவனிக்கும் வகையில் ஒரு பிழை திருத்துபவர் பணியிடத்தை ரூ.15,000/– தொகுப்பூதியத்தில் நியமிக்கவும் மற்றும் கணினி

த.பி.பா.,

இயக்குபவர் (DTP Operator) பணியிடம் ரூ.10,000/- தொகுப்பூதியத்திலும் தோற்றுவிக்கலாம் என்றும், இதற்கு பணி அனுபவம் உள்ள ஓய்வு பெற்ற ஆங்கில கல்லூரி பேராசிரியர்கள், ஆங்கில பள்ளி ஆசியர்கள் ஆகியோரில் தகுதியுடையவர்களையும் மற்றும் பத்திரிகைகைத் துறையில் பிழை திருத்துபராக அனுபவம் பெற்றவர்களையும் கணிணி இயக்குபவர் பணிக்கு முன் அனுபவம் உள்ளவரையும் நேரடியாக பணியமர்த்திக் கொள்ளவும் கோரும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று மொழிபெயர்ப்பாளர் பணியிடம் இரண்டிற்கு பதிலாக ஒரு பணியிடம் மட்டும் தோற்றுவிக்கவும் ஏனைய பணியிடங்கள் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை கோரியவாறு தோற்றுவிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

3. மேற்கண்ட இச்செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2220 செய்தி மற்றும் விளம்பரம் -60 எனையவை 110 வெளியீடுகள்-I திட்டத்தில் சேராதது AC தமிழரசுப் பத்திரிக்கை அச்சிடுதலும் வெளியிடுதலும். 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 ஒப்பந்த ஊதியம்"

(து.தொ.கு 2220 60 110 AC 3348)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணித் திட்டம்" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது-1)த் துறைக்கு அனுப்பி வைக்கவும், மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2012-2013ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குத் தவறாது உரிய நேரத்தில் நிதி(வ.செ.பொது-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.39383 / தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி/2012, நாள் 12.07.2012 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 613 (அறுநூற்று பதிமூன்று) ன் மூலம் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணை செயலாளர், சென்னை-9.
துணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு, சென்னை-2
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

<u>நகல்</u>
நிதி(வ.செ.பொ.1/வ.செ.பொ.2)/ தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி)த் துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி)த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்